(ஆ) மருத்துவத்துறை பற்றிய வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

* திரு. இரெ. இராசமாணிக்கம்: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார். மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கேள்விகளை எல்லாம் 11-ம் தேதி எடுத்துக்கொள்வதாக சபையில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது ஒத்திவைக்கப்பட்டது. இன்று தேதி 27. 16 நாள் ஆகியும் அந்த ஒத்திவைக்கப்பட்ட கேள்விகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பதில் அளிக்கப்படவில்லை. சபையின் கூட்டம் முடிய இருக்கிறது. சபைக்கு வந்த கேள்விகள் என்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மருத்துவத் துறை பற்றிக் கேட்கிறார்கள். அமைச்சரிடமிருந்து பதில் வந்த பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, அமைச்சரிடமிருந்து பதில் வந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். கேள்விப் பட்டியலை அவையில் வைக்கிறபோது அமைச்சரிடமிருந்து பதில் வருவதற்கு முன்பே வைக்கப்பட்டு விட்டதா? அப்படியானால் செயலகம் அந்தத் தவறை செய்து விட்டதா? செய்து இருக்க முடியாது. நீண்டகால அனுபவம் உள்ள செயலகம் அப்படிப்பட்ட தவறை நிச்சயமாகச் செய்து இருக்க முடியாது.. ஆகவே, பதில் வந்த பிறகுதான் கேள்விப் பட்டியல் வைக்கப்பட்டு இருக்கிறது. அது ஒத்திவைக்கப்பட்டது. அப்படி ஒத்திவைக்கப்பட்டது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதுதான் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினருடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் இன்று வரவில்லை. அவர் வந்தபிறகு எடுத்துக் கொள்ளப்படும் என்ற பொருளிலே சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி: அமைச்சருடைய பதில் வந்த பிறகுதான் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். அதற்கு இதுதான் பொருள் என்றால், சபாநாயகரே சொல்லும்போது அந்த அகராதியை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.